K

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு, சனவரி - 2020

## வகுப்பு 12

பதிவு எண் | | | | | | |

நேரம் : 3.00 மணி

## பொதுத்தமிழ்

மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **14×1=14**

1) இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2) வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

3) கடலின் பெரியது
அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயமல் ஒருவர் செய்த உதவி
இ) தினையளவு செய்த உதவி ஈ) செய்யாமல் செய்த உதவி

4) சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

5) விளியறி ஞமலி - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) மான்

6) படிமம் என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) உணர்ச்சி

7) இலக்கணக்குறிப்பு எழுதுக: ஆடலும் பாடலும்
அ) வினைத்தொகை ஆ) எண்ணும்மை
இ) உம்மைத்தொகை ஈ) உவமைத்தொகை

8) ஏந்தி - இச்சொல்லில் பயின்று வரும் விகுதி
அ) பெயரெச்ச விகுதி ஆ) தொழிற்பெயர் விகுதி
இ) வினையெச்ச விகுதி ஈ) வியங்கோள் வினைமுற்று விகுதி

9) உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் .......... இத்தொடரில் பெயரெச்சம்
அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

10) 'சாப விமோசனம்', 'அகலிகை' கதைகளில் 18 தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்
இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

11) புணர்ச்சி விதி தருக: உரனுடை = உரன்+உடை
அ) இனமிகல் ஆ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் இயல்பே
இ) தன்னொற்று இரட்டல் ஈ) முன்னின்ற மெய்திரிதல்

12) சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம்
இ) திண்டிவனம் ஈ) சேலம்

13) பொருத்துக:
அ) குரங்குகள் - 1. கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) பசுக்கள் - 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ) பறவைகள் - 3. குளிரால் நடுங்கின
ஈ) விலங்குகள் - 4. மேய்ச்சலை மறந்தன
அ) 1, 3, 4, 2 ஆ) 3, 1, 2, 4 இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

14) யார்? எது? ஆகிய வினாச் சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே .............

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: **3×2=6**

15) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாடத் தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16) நிலையாமை குறித்துச் சவரி உரைக்கும் கருத்து யாது?

17) மனத்தை அதன் போக்கில் செல்லவிடக்கூடாது என்று வள்ளுவர் கூறுவது ஏன்?

18) செவியறிவுறூஉ - துறையை விளக்குக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2×2=4**

19) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியர் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20) அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

21) மேலான மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறுவது யாது?

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடையளிக்கவும்: **7×2=14**

22) சொல்லைப் பிரித்தும், சேர்த்தும் தொடரமைக்க: தாமரை

23) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:

1. என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீது தான்; அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.
2. நம் வாழ்க்கையின் தரம் தமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

24) திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

25) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:

1. நிலத்தக் கௌறணும்; அப்பதான் வகுறு நிறையும்.
2. அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியது தானே.

26) பிரித்தெழுதிப் புணர்ச்சி விதி தருக: பூம்பாவாய்

27) பின்வரும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக:

குதிரை, வேகம், ஓடு, தாவு

28) எவையேனும் ஒன்றுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:

1. விம்முகின்ற 2. நேர்வான்

29) பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க:

களம், கலம்

30) வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

## பகுதி - III

### பிரிவு - 1

**2×4=8**

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:

31) ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32) கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக:

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

33) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டும் எனக் கூறுகிறார்?

34) அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?

### பிரிவு - 2

**2×4=8**

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:

35) மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

36) நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

37) சென்னையில் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

38) மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு - 3

**3×4=12**

எவ்வையேனும் மூன்றனுக்கு விடை தருக:

குறிப்பு: காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் வினா எண். 40-க்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

39) இலக்கிய நயம் பாராட்டுக:

முச்சங்கங் கூட்டி முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே அளப்பரிய பொருள் கூட்டி
சொற்சங்க மாகச் சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம் அமைத்த பெருமாட்டி!

- **கண்ணதாசன்**

40) தமிழாக்கம் தருக:

1. Learning is a treasure that will follow it's owner everywhere.
2. A new language is a new life.
3. If you want people to understand you, speak their language.
4. Knowledge of languages is the doorway to wisdom.

**குறிப்பு: செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுவினா. பின்வரும் பத்தியைப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

40. (அ) முதல் (ஈ) வரை

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும்.

**வினாக்கள்:**

அ) மொழி எத்தகைய கலை? எத்தகைய கருவி?

ஆ) பெற்ற தாயின் பெரிய மகிழ்ச்சி எது?

இ) மனவளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பு எத்தகையது?

ஈ) மொழி வளர்ச்சி எதன் அடிப்படையில் அமையும்?

41) **பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்தெழுதுக:**
யானைக்கும் அடி சறுக்கும் **(அல்லது)**
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

42) தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

43) **கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக:**

1. நேற்று முதல் ................ (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
2. உங்களுக்கு ................ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.
3. எழிலன் ................ (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
4. நம்முடைய ................ (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

## பகுதி - IV

**3×6=18**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:**

44) அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்தெழுது.

**(அல்லது)**

ஆ) எளிய மக்களின் வலிகளை, நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

45) அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்து மனித சமூகம் என்னும் பரந்த அமைப்புக் கட்டமைக்கப்படுகிறது எவ்வாறு? விளக்குக.

**(அல்லது)**

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வை பார்வையைக் கட்டுரையாக்கு.

46) அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது - விளக்குக.

## பகுதி - V

**4+2=6**

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:**

47) அ) துன்பு உளதுஎனின் ............ எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

ஆ) 'மகற்கு' என முடியும் குறள்.

----------